# வடக்கு மாகாண தமிழ் மொழி மூல மற்றும் சிங்கள மொழி மூலப் பாடசாலைகளில் நிலவும் இலங்கை ஆசிரியர் சேவையின் 3 ஆம் வகுப்பு 1 (இ) தரப் பதவி வெற்றிடங்களுக்கு டிப்ளோமாதாரிகளை ஆசிரியர்களாக நியமனம் செய்தல் - 2019.08.31

வடக்கு மாகாண தமிழ் மொழி மூல மற்றும் சிங்கள மொழி மூலப் பாடசாலைகளில் நிலவும் இலங்கை ஆசிரியர் சேவையின் 3 ஆம் வகுப்பு 1 (இ) தரப் பதவி வெற்றிடங்களுக்கு டிப்ளோமாதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்வதற்காக வட மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினால் **2019.04.03** ஆம் திகதி கோரப்பட்ட ஆட்சேர்ப்பு விளம்பரத்திற்கு அமைவாக, வட மாகாண கல்வி அமைச்சினால் 2019.08.05, 2019.08.06, 2019.08.08, 2019.08.09, 2019.08.13 மற்றும் 2019.08.15 ஆம் திகதிகளில் நடாத்தப்பட்ட நேர்முகத்தேர்வுடன் இணைந்த பிரயோகப் பரீட்சைக்குத் தோற்றி தகைமை பெற்றோர் 215 பேர் ஆசிரியர் நியமனத்திற்காக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான நியமனக் கடிதங்களை வழங்கும் வைபவம் எதிர்வரும் **2019.08.31 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ். பொது நூலக கேட்போர் கூடத்தில் (Public Library Hall, Jaffna)** நடைபெறவுள்ளது. எனவே தெரிவு செய்யப்பட்டுள்ள விண்ணப்பதாரர்கள் **அன்றைய தினம் காலை 9.00 மணிக்கு யாழ். பொது நூலகத்திற்கு தமது அடையாளத்தினை உறுதிப்படுத்தக்கூடிய ஆவணத்துடன் (தேசிய அடையாள அட்டை அல்லது செல்லுபடியாகும் கடவுச்சீட்டு)** அறிக்கையிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

எனவே தெரிவு செய்யப்பட்ட டிப்ளோமாதாரிகள் **{பெண்கள் இள வர்ண சாறியுடனும் ஆண்கள் கறுப்பு வர்ண நீள் காற்சட்டை மற்றும் வெள்ளை நிற சட்டையும் (சேட்) அணிவதுடன் கழுத்துப் பட்டி (Tie) அணிதல் வேண்டும்.}** குறித்த திகதியில் தவறாது **யாழ். பொது நூலக கேட்போர் கூடத்திற்கு** சமுகமளித்து தங்களுக்குரிய நியமனக் கடிதங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் அவர்கள் அறிவித்துள்ளார்.

ஆசிரியர் நியமனத்திற்காக தெரிவு செய்யப்பட்டுள்ள விண்ணப்பதாரர்களின் நியமனத்திற்கான அழைப்புக் கடிதங்கள் அவர்களின் சொந்த முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.